## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திரு.நா. காளிதாஸ், MSc.,

ந.க.எண். 57807/அந1/2/2014 நாள். 11.01.2016

பொருள் : அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV – போட்டித் தேர்வு 2013–2014 மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் இணைந்த தட்டச்சர்களுக்கு பணிவரன் முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. இவ்வியக்கக நிபி2ன் கடிதம் எண். 56491/நிபி2/2/2014, நாள். 10.09.2014 மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலரின் கடிதம் எண். 5904/PSD-F/014 நாள். 03.09.2014
2. இவ்வியக்கக பணி நியமன ஆணை எண். 57807/அந1/2/2014 நாள். 12.09.2014

*******

**ஆணை:**

பார்வை 1ல் காணும் கடிதம் வழி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 9 தட்டச்சர்களுக்கு பார்வை 2ல் காணும் இவ்வியக்கக ஆணைகளின்படி பணி நியமனம் மற்றும் பணியிட அமர்வு ஆணை வழங்கப்பட்டது. அதன்படி கீழ்காணும் தட்டச்சர்கள் அவர்கள் தங்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் பணியில் இணைந்துள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள தட்டச்சர்கள் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் பொது விதி 10(a) (i)ன்படி பணிநியமனம் பெற்று முறையே இவ்வலுவலகப் பணியில் தட்டச்சர்களாக பணியில் இணைந்துள்ளனர்.

எனவே கீழ்காணும் பட்டியலில் கலம் 4ல் குறித்துள்ள நாள் முதல் அவர்களின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. அவர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டு பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டு பணிக்காலம் முடிக்கும் வகையில் அவர்கள் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுகிகிறார்கள்.

கீழ்காணும் தட்டச்சர்கள் தகுதி காண் பருவ காலத்தில் கணிணியில் அலுவலக இயக்குமுறை (Computer on Office Automation) மற்றும் மருத்துவ விதி தொகுப்பு (Medical Code) தேர்வில் தேர்ச்சி பெற்றால் தான் தகுதி காண் பருவம் பூர்த்தி செய்த ஆணை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | அரசுப் பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | செல்வி.T. அர்ச்சனா | 18.09.2014 முப | 18.09.2014 முப |
| 2 | திருமதி.M.S. சுமதி | 18.09.2014 முப | 18.09.2014 முப |

| | | | |
|---|---|---|---|
| 4 | திருமதி.K. ஸ்வர்ணலதா | 19.09.2014 முப | 19.09.2014 முப |
| 5 | திருமதி.A.நிர்மலாதேவி | 19.09.2014 முப | 19.09.2014 முப |
| 6 | திருமதி.D.இலக்கியா | 17.09.2014 முப | 17.09.2014 முப |
| 7 | திருமதி.L. ஜெயந்தி | 13.10.2014 முப | 13.10.2014 முப |
| 8 | திருமதி.S.லதா நேரு | 30.10.2014 முப | 30.10.2014 முப |
| 9 | திரு.R. சீனிவாசன் | 03.11.2014 முப | 03.11.2014 முப |

மேற்படி குறிப்பிட்டுள்ள தட்டச்சர்களின் தற்காலிகப் பணி அவர்கள் தட்டச்சர்களாக அரசுப்பணியில் இணைந்துள்ள நாள் முதல் (மேலே அவர்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல் ) 2013 – 2014 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பட்ட தொகுதி – 4 தேர்வு நியமனத்திற்கு எதிராக தொடுக்ககபட்ட சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள நீதி பேராணையின் மீது நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் முடிவிற்கு உட்பட்டு, பணிவரன்முறை செய்யப்படுகிறது.

நா. காளிதாஸ்
கூடுதல் இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக
நலப்பணிகள் (நிர்வாகம்)

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர்கள்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை – 6
நகல்
நிர்வாகப் பிரிவு 2 / பணப்பிரிவு (2 நகல்கள்) / பணிப்பதிவேடு
இருப்புக்கோப்பு / உதிரி

// உண்மை நகர் // அனுப்பப்படுகிறது//

11.2.16
நிர்வாக அலுவலர்

10.2.16